

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.7.2024) தலைமைச் செயலகத்தில், ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரத்தின் துணை ஆளுநர் யாமாகுஜி நோபிஹிகோ (Thiru. Yamaguchi Nobuhiko) அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஒசாகா நகரத்தின் செயல் இயக்குநர் (வளர்ச்சித் தொழில்) ஸ்ரீநிச்சி மேய்தா (Thiru. Srinichi Maeda), சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டு துணைத் தூதர் டக்காஹாஷி முனியோ (Thiru. Takahashi Muneo) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.7.2024) முகாம் அலுவலகத்தில், பேராசிரியர் அவர்களின் மகன் அ.அன்புச்செல்வன் மற்றும் பேரனும், சட்டமன்ற உறுப்பினருமான அ. வெற்றியழகன் ஆகியோர் சந்தித்து, திராவிட முன்னேற்றக் கழக கூட்டணி நாடாளுமன்றத் தேர்தலிலும், விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலிலும் தொடர் வெற்றி பெற்றதையொட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.



### 7.5% உள்ஒதுக்கீட்டில் சிறப்புப் பிரிவினருக்கு ஆன்லைன் மூலம்

# பொறியியல் படிப்பிற்கான கலந்தாய்வு! அமைச்சர் க. பொன்முடி தொடங்கி வைத்தார்!

## 29 ஆம் தேதி முதல் பொதுப்பிரிவினருக்கு கலந்தாய்வு!



சென்னை, ஜூலை 23-

தமிழ்நாட்டில், பொறியியல் படிப்புகளுக்கான கலந்தாய்வு தொடங்கியது. முதல்நாளான நேற்று 7.5% உள்ஒதுக்கீட்டில் சிறப்புப் பிரிவினருக்கு கலந்தாய்வு ஆன்லைன் மூலம் நடைபெற்றது.

பொறியியல் படிப்புகளுக்கான விண்ணப்பப் பதிவு கடந்த மே 15 முதல் ஜூன் 9ஆம் தேதி வரை நடைபெற்றது. மாணவர் சேர்க்கைக்கான தரவரிசைப் பட்டியல் கடந்த மாதம் 26ஆம் தேதி வெளியிடப்பட்டது. இந்நிலையில், தமிழ்நாட்டில், பொறியியல் படிப்புகளுக்கான கலந்தாய்வு நேற்று தொடங்கியது.

முதல்நாளான நேற்று 7.5 சதவீத உள்ஒதுக்கீட்டில் சிறப்புப்பிரிவினருக்கு கலந்தாய்வு ஆன்லைன் மூலம் நடைபெற்றது.

இந்தப் பிரிவில் அரசு பள்ளி மாணவர்கள் 36 ஆயிரம் பேர் விண்ணப்பித்து உள்ளனர். செப்டம்பர் 11ம் தேதி வரை பொறியியல் படிப்பு கலந்தாய்வு நடைபெறும் நிலையில், வரும் 29ம் தேதி முதல் பொதுப் பிரிவினருக்கான கலந்தாய்வு நடைபெறுகிறது.

சென்னை கிண்டி தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் கலந்தாய்வை தொடங்கி வைத்து பேசிய உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, சிறப்பு பிரிவில் மாற்றுத்திறனாளி மாணவர்கள் 664 பேர் விண்ணப்பித்துள்ளதாகவும், 7.5 சதவீத இடஒதுக்கீட்டின் கீழ் இடம் கிடைக்காத மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மற்றப்பிரிவுகளில் பங்கேற்கலாம் எனத் தெரிவித்தார்.

நடப்பாண்டு பொறியியல் படிப்பில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகக் குறிப் பிட்ட அமைச்சர் பொன்முடி, அடுத்த ஆண்டு முதல் விளையாட்டு பிரிவு மாணவர்களுக்கு 2 சதவீத இடங்கள் ஒதுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.7.2024) தலைமைச் செயலகத்தில், கொங்கு மக்கள் தேசியக் கட்சியின் தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈ.ஆர். ஈஸ்வரன் சந்தித்து, திருச்செங்கோடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலைய வளாகத்தில் பணியாளர்களுக்கான புதிய குடியிருப்புகள் கட்டப்படும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டார்.

### நாடாளுமன்றத்தில்

# ‘நீட்’ தேர்வு விவகாரம் குறித்து பேச அனுமதிக்க வேண்டும்!

## மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி. பேட்டி!

புதுடெல்லி, ஜூலை 22

‘நீட்’ தேர்வு விவகாரம் கறித்து பேச நாடாளுமன்றத்தில் அனுமதிக்க வேண்டும் என்று டி.ஆர்.பாலு கூறினார்.

நாடாளு மன்றத்தை சுமுகமாக நடத்துவது தொடர்பாக அனைத்துக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் டெல்லியில் நேற்று முந்தினம் நடைபெற்றது. இதில் நாடாளுமன்ற கட்சித் தலைவர்கள் பங்கேற்றனர்.

இதில் தி.மு.க. சார்பில் மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு, மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா ஆகியோர் கலந்து கொண்டனர். பின்னர் டி.ஆர்.பாலு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நீட் எதிர்ப்பு

நீட் எதிர்ப்பு நிலை தற்போது நாடு முழுவதும் இருக்கிறது. அதுபற்றி பேசுவதற்கு அனுமதி அளிக்க தி.மு.க. சார்பில் கேட்டு இருக்கிறோம். பட்ஜெட்டில் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி சரியாக போய் சேர்கிறதா? அந்த தொகை முறையாக செலவு செய்யப்படுகிறதா? என்று கணக்கிடப்படவில்லை.

இதை நாடாளுமன்ற இரு அவைகளின் குழுவைக் கொண்டு விசாரிக்க வேண்டும். மத்திய, மாநில அரசு திட்டங்களுக்கு மத்திய அரசு தனது பங்குத் தொகையை வழங்காமல் இருக்கிறது. சென்னை 2-ம் கட்ட மெட்ரோ திட்டம் ரூ.63 ஆயிரம் கோடியில் நடைபெறுகிறது. 60 சதவீத பணிகளை தமிழ்நாடு அரசே செய்து முடித்திருக்கிறது. ஆனால் இதுவரை மத்திய அரசு தனக்குரிய பங்குத் தொகை யை வழங்கவில்லை.

இதுபோல பேரிடர் நிவாரண நிதியும் இதுவரை வழங்கப்படவில்லை. இதுபற்றியெல்லாம் பேச அனுமதி கேட்டு இருக்கிறோம். சாதி வாரி கணக்கெடுப்பு தமிழ்நாட்டில் நடத்தி 30 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டது. இதனையும், மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை பற்றியும் பேசுவதற்கு வலியுறுத்தி இருக்கிறோம்.

மாநில அரசுகளை கவர்னர்கள் மிதமிஞ்சும் போக்கு எல்லா மாநிலங்களிலும் குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் நடக்கிறது. ஜனநாயகம் பெயருக்குத்தான் இருக்கிறது. நாடாளுமன்றத்தில் எம்.பி.க்களை ஒரு பாமரனை போல நடத்துகிற அவலம் இருக்கிறது. பத்திரிகையாளர்களை உள்ளே விடுவதில்லை. இந்தியாவில் ஜனநாயகம் வினாக்கு றியாக மாறி விபரீதத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

பாரபட்சம்

இது போன்ற கூட்டங்களுக்கு பிரதமர் நியாயமாக வரவேண்டும். ஆனால் அவர் வருவதே இல்லை எதிர்க்கட்சிகளை அவர் மதிப்பதே இல்லை. மாநில நிதி பகிர்வில் மத்திய அரசு பாரபட்சம் காட்டுகிறது. மாநிலங்கள் வஞ்சிக்கப்படுகின்றன என்று கூட்டத்தில் அழுத்தமாக சொன்னோம். கடந்த காலங்களில் உரிமைகளுக்காக நாங்கள் போராடினோம். அது அமளி அல்ல. ஆளுங்கட்சி தவறு செய்வதை அமைதியாக பார்த்துக் கொண்டு இருக்க நாங்கள் வரவில்லை. எங்கள் கருத்துகளுக்கு மரியாதை கொடுத்தால் அமைதியாக இருப்போம்.

சர்வாதிகாரம்

மக்கள் பிரச்சினைகளை சொல்லும் போது அவர்கள் காது கொடுத்து கேட்க வேண்டும். பேசவே கூடாது என்று சொன்னால் அதற்கு பெயர் சர்வாதிகாரம், வாய்ப்பூட்டு எனவே நாங்கள் போராடுவதை அமளி என்று அவர்கள் சொல்லுவதைப் போல வேறு யாரும் சொல்ல வேண்டாம்.

இந்தியாவில் ஆங்கிலத்தை அப்புறப்படுத்த முடியாது. அப்புறப்படுத்துவதற்காக இந்தியை திணிக்க முயன்றால் 1965-ம் ஆண்டின் நிலை திரும்பவும் வரும். தமிழ்நாட்டில் அந்த மொழிப் புரட்சி முதன்முதலில் தொடங்கும்.

இந்தியாவிலும் ஏற்படும்

வங்காள தேசத்தில் வேலையில்லா திண்டாட்டம் காரணமாக இளைஞர்கள், மாணவர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள். அது போன்ற நிலை இந்தியாவிலும் ஏற்படும். நாடாளுமன்ற அத்துமீறல் சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் என்ன ஆனார்கள்? என்ன நடவடிக்கை அவர்கள் மீது எடுக்கப்பட்டது? என்று இது வரை தெரியவில்லை.

கைது செய்யப்பட்ட அவர்கள் வேலையில்லா திண்டாட்டத்தை வலியுறுத்த வந்ததாகவே சொன்னார்கள். கட்டுப்பாடுகளை மீறி வரும் ஆற்றல் தங்களுக்கு இருக்கிறது என்பதை அவர்கள் காட்டினர். இந்த விஷயங்கள் எல்லாம் இன்று மறந்து போய்விட்டன. இது தான் இன்றைய நிலை,

இவ்வாறு டி.ஆர்.பாலு கூறினார். அப்போது திருச்சி சிவா எம்.பி. உடனிருந்தார்.

### தமிழ்நாட்டில் ஒரே நாளில்

# 36.09 லட்சம் லிட்டர் பால் அதிகபட்சமாக கொள்முதல்!

## அமைச்சர் மனோ தங்கராஜ் தகவல்!

சென்னை, ஜூலை 23-

தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் 36.09 இலட்சம் லிட்டர் பால் அதிகபட்சமாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்று பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் நேற்று முன்தினம் (21.07.2024) அதிகபட்ச பால் கொள்முதலாக 36.09 இலட்சம் லிட்டர் பால், 27 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் மூலம் ஆவின் கொள்முதல் செய்துள்ளது. மேலும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் உள்ளூர் விற்பனையான 4 இலட்சம் லிட்டர் பால் கணக்கில் கொள்ளும்போது தமிழ்நாட்டில் பால்வளத்துறை மூலமாக 40 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தற்போது 2,800 மெ.டன் வெண்ணெய்யும், 4,200 மெ.டன் பால் பவுடரும் கையிருப்பில் உள்ளது. மேற்காணும் கையிருப்பைக் கொண்டு எதிர் வரும் பண்டிகை காலங்களுக்கு தேவையான பால் பொருட்களை பொது மக்களுக்கு தங்கு தடையின்றி விநியோகம் செய்வது உறுதி செய்யப்படும்.

மேலும் பொதுமக்களுக்கு ஆவினின் அனைத்து வகையான பொருட்களும் தங்கு தடையின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கூடிய விரைவில் தயிர் மற்றும் பன்னீர் விற்பனையை அதிகரிக்கும் வகையில் மாவட்டம் தோறும் மொத்த விற்பனையாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் த.மனோ தங்கராஜ் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு “கலைஞர் திரை இசைப் பாடல்கள் நூல் வெளியீட்டு விழா முத்தமிழ்ப் பேரவை அரங்கில் நடைபெற்றது. தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர், கழகத் துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. நூலை வெளியிட, நிதி மற்றும் மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பெற்றுக் கொண்டார். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு, திராவிட இயக்க வரலாற்று ஆய்வாளர் க. திருநாவுக்கரசு, நூலை தொகுத்து வழங்கிய கவிஞர் நெல்லை ஜெயந்தா ஆகியோர் உடன் இருந்தனர். விழாவிற்கு முன்பாக திரைப்பட இசையமைப்பாளர் கலைமாமணி வெ. தாயன்பன் அவர்களின் இசைக் குழுவின் கலைஞர் அவர்களின் திரையிசை பாடல்கள் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

### 58 ஆண்டுகளாக இருந்த தடையை நீக்கியது, ஒன்றிய பா.ஜ.க. கூட்டணி அரசு!

# அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்.ஸில் இணையலாமாம்!

## தடையை நீக்கிய ஒன்றிய அரசின் செயலுக்கு - எதிர்க் கட்சிகள் கடும் கண்டனம்!

**புதுடெல்லி, ஜூலை 23–**

**‘அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்.ஸில் இணையலாம்’ என, இதுவரை இருந்து வந்த தடையை நீக்கிய ஒன்றிய அரசின் செயலுக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.**

**சமீபத்தில் மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்த மோடி தலைமையிலான ஒன்றிய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் சேருவதற்கு இருந்த தடையை நீக்கியுள்ளது குறித்து எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.**

அதன் விவரம் வருமாறு:

அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் சேர்வதற்கு தடை விதிக்கப்பட்டு இருந்தது. இந்தத் தடை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் சேர்ந்து செயல்படுவதற்கு விதிக்கப்பட்ட தடையை ஒன்றிய அரசு நீக்கியுள்ளது.

ஆர்.எஸ்.எஸ் உறுப்பினராக இருந்த நாதுராம் கோட்சே, மகாத்மா காந்தியை சுட்டு படுகொலை செய்ததாலும், தொடர் வன்முறைக் காரணங்களாலும் 1948ன் ஆரம்பத்தில், “நாடு இப்போது பெற்றிருக்கும் சுதந்திரத்தைச் சீர்குலைக்கும் ஆர்.எஸ்.எஸ் ஒரு சட்டவிரோத அமைப்பு” எனக் குறிப்பிடப்பட்டு, அப்போது உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் படேலால் தடை அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் சேர்வதற்கும், அதன் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கும் 58 ஆண்டு காலமாக இருந்து வந்த தடையை மோடி தலைமையிலான ஒன்றிய பாஜக அரசு தற்போது நீக்கி அரசாணை வெளியிட்டுள்ளது. 1948 ஆம் ஆண்டு தேசப்பிதா மகாத்மா காந்தி சுட்டுக்கொல்ல ப்பட்டதன் எதிரொலியாக முதல் முறையாக தீவிர வலதுசாரி இந்துத்துவ அமைப்பான ஆர்.எஸ். எஸ். அமைப்புக்கு சர்தார் வல்லபாய் படேல் தடை விதித்தார்.

சில காலங்களுக்கு பிறகு நன்னடத்தை பேரில் அந்தத் தடை நீக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து 1966 வாக்கில் பசுக்கொலைகளுக்கு போராடுகிறோம் என்று வெகுஜன ஆதரவை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு திரட்டி போராட்டம் நடத்தத் துவங்கியது. இதன் உச்சமாக நாடாளுமன்றத்தில் பசுக்கொலைகளுக்கு எதிராக மாபெரும் போராட்டம் நடந்தது.

இதனைத்தொடர்ந்து அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் அரசு ஊழியர்கள் சேரவும், அதன் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் தடை விதித்தார். இடையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினோடு நெருங்கிய தொடர்புடைய பாஜக ஆட்சி அமைந்த போதும் பிரதமர் வாஜ் பாய் ஆர்.எஸ்.எஸ். மீதான இந்த தடையை நீக்காத நிலையில் தற்போது 3 வது முறையாக பிரதமர் ஆகியுள்ள மோடி தலைமையிலான பாஜக அரசு இந்த தடையை நீக்கி உத்தரவிட்டுள்ளது.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலுக்குப் பின் மோடி மீது ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் அதிருப்தியில் இருப்பது சமீப காலமாக பொது வெளியில் அவர்களின் பேச்சில் இருந்து தெரிகிறது. இந்த விரிசலை சரி செய்யவே ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு இந்த உபகாரத்தை மோடி செய்து கொடுத்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். இதற்கிடையில் தடையை நீக்கியதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

ஜூலை 18, 1948 அன்று ஹிந்து மகாசபா தலைவர் சியாமா பிரசாத் முகர்ஜிக்கு சர்தார் வல்லபாய் படேல் எழுதிய கடிதத்தில், “இந்து மகாசபாவின் தீவிரப் பிரிவினர் காந்தியைக் கொல்ல சதியில் ஈடுபட்டுள்ளனர் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. ஆர்.எஸ்.எஸ்-ன் செயல்பாடுகள் அரசு மற்றும் அரசின் செயல்பாடுகளுக்கு தெளிவான அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது. தடை விதிக்கப்பட்ட போதிலும் அந்த நடவடிக்கைகள் ஓயவில்லை என்பதை அறிக்கைகள் காட்டுகின்றன.

இது தொடர்பாக மதுரை எம்.பி., சு.வெங்கடேசன் தன் ‘எக்ஸ்’ பக்கத்தில், ஒன்றிய அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் சேர அனுமதி மறுக்கப் பட்டிருந்தது. இப்பொழுது அனுமதி கொடுத்து உத்தர விடப்பட்டுள்ளது. சாவர்கரின் பிறந்தநாளில் புதிய நாடாளுமன்றத்தை திறந்து, அரசு ஊழியர்களை ஆர்.எஸ்.எஸ்.க்கு அனுப்பி வைக்கும் வேலையை துவக்கியிருக்கிற மோடி அரசுக்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.” எனக் குறிப்பிட்டிருந்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ்

இந்த நிலையில், தற்போது காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தன் ‘எக்ஸ்’ பக்கத்தில்,

“1948 பிப்ரவரியில் மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்ட பிறகு, சர்தார் வல்லபாய் படேல் ஆர்.எஸ்.எஸ் அமைப்பைத் தடை செய்தார். இதன்பின், தடை நீக்கப்பட்டது. ஆனால் தற்போதுவரை நாக்பூரின் ஆர்.எஸ்.எஸ். தலைமை இடத்தில் மூவர்ணக் கொடி ஏற்றப்படவில்லை. 1966ல் அதிகாரப்பூர்வமாக ஆர்.எஸ்.எஸ். நடவடிக்கைகளில் அரசு ஊழியர்கள் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது.

ஜூன் 4, 2024க்கு (தேர்தல் முடிவு) பிறகு, மனித நேயமற்ற பிரதமருக்கும் ஆர்.எஸ்.எஸ்க்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. ஜூலை 9, 2024 அன்று, அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது கூட நடைமுறையில் இருந்த, அரசு ஊழியர்கள் ஆர். எஸ்.எஸ்ஸில் இணைவதற்கான 58 ஆண்டு தடை, தற்போது நீக்கப்பட்டிருக்கிறது.” எனக் குறிப்பிட்டு, ஜூலை 9 அன்று பணியாளர் மற்றும் பயிற்சித் துறை (DoPT) பிறப்பித்த உத்தரவைப் பகிர்ந்துள்ளார்.



மாதவரம் சட்டமன்றத் தொகுதி புழல் பேரூர் கழக முன்னாள் செயலாளர், தலைமைக் கழக சொற்பொழிவாளர், 23வது வட்டச் செயலாளராக பணியாற்றி நினைவில் வாழும் புழல் து.திருநாவுக்கரசு அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு, அரசு பள்ளி மற்றும் அங்கன்வாடி மையங்களுக்கு நலத்திட்ட உதவிகள் 50 கழகம் முன்னோடிகளுக்கு சட்டை மற்றும் 500 பேருக்கு அறுசுவை உணவு ஆகியவற்றை வி.பரணிதரன் ஏற்பாட்டில் மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் வழங்கினார். தினகரன் பத்திரிகையின் மூத்த நிருபர் முன்னாள் மாவட்ட பிரதிநிதி இ.எஸ்.தமிழ் கொடி, ந.குணாநிதி முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் முன்னாள் கவுன்சிலர்கள் அகிலா அந்தோணி, சீனு நாகராஜன், கே.பி.பி.அறிவழகன், ந.எழில் ராவணன், வக்கீல் கே.பி.எஸ்.அன்பரசு, கௌரி அன்பழகன், து.முரளிதரன், து.திருமாவளவன், தி.சித்தார்த்தன், தி.சிபி அரசு, பி.எஸ்.என்.எல். நாகராஜ் மெட்ரோ ராஜன், எம்பி முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.